**<u>விழுப்புரம், அரசு மருத்துவக் கல்லூரி, முதல்வரின் செயல்முறை ஆணை</u>**
**<u>பிறப்பிப்பவர்:M.கீதாஞ்சலி, MD.,DCH.,</u>**

<u>மூ.மு.எண்:1757/நி2/2022</u>

<u>நாள்: 12 .09.2023</u>

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி விழுப்புரத்தில் பணிபுரியும் பண்டகக் காப்பாளர் / இளநிலை உதவியாளர்கள் - தற்காலிக பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயல்முறை ஆணை மூ.மு.எண்:18967/நி2/2020, நாள்:26.05.2022 இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள், சென்னை-06.
2. பணிநியமன ஆணை ந.க.எண்:18967/நி2/2020-82,88,90 91,92,93 நாள்:26.05.2022 இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள், சென்னை-06.
3. ந.க.எண்:28454/E2/5/2020 நாள்:08.06.2022, இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-10.
4. ந.க.எண்:1757/E2/2022, நாள்:18.07.2022, முதல்வர், அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி, விழுப்புரம்.

*******

<u>ஆணை:</u>

அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரியில் பண்டகக் காப்பாளர் / இளநிலை உதவியாளர்களாகப் பணிபுரிந்து வரும் கீழ்காணும் பணியாளர்கள் பார்வை-1 மற்றும் 2-இல் கண்டுள்ள இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள், சென்னை-06 அவர்களின் செயல்முறை ஆணையின்படி, அடித்தளப் பணியாளர் நிலையிலிருந்து தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் விதி 3(g)-ன் கீழ் தற்காலிக பதவி உயர்வு மற்றும் பணிநியமனம் செய்யப்பட்டார்கள்.

பார்வை 3-இல் கண்டுள்ள சென்னை, மருத்துவக் கல்வி இயக்ககம், இயக்குநரின் கடிதத்தினைத் தொடர்ந்து, அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி, முதல்வரின் பணி இணைவு ஆணையின்படி, 13.06.2022 முற்பகல் முதல் பண்டகக் காப்பாளர் / இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

அவர்களது தற்காலிகப் பணியினை (பணியில் இணைந்த நாள் முதல்) கீழ்குறிப்பிட்டுள்ளவாறு பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணியில் ஈராண்டு தகுதிகான் பருவத்தில் வைக்கப்படுகிறார்கள்.

| வ. எண் | பணி நியமன முதுநிலை எண் | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | பிறந்த தேதி | பணியில் இணைந்த நாள் | பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | 82 | சு.பேபிகலா, இளநிலை உதவியாளர் / பண்டகக் காப்பாளர் | 16.05.1975 | 13.06.2022 மு.ப | 13.06.2022 மு.ப |
| 2. | 88 | அ.செபஸ்டியன், இளநிலை உதவியாளர் / பண்டகக் காப்பாளர் | 16.07.1968 | 13.06.2022 மு.ப | 13.06.2022 மு.ப |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | 90 | செ.கொளஞ்சி அரசி, இளநிலை உதவியாளர் / பண்டகக் காப்பாளர் | 29.02.1972 | 13.06.2022 மு.ப | 13.06.2022 மு.ப |
| 4. | 91 | அ.மருதமலை, இளநிலை உதவியாளர் / பண்டகக் காப்பாளர் | 10.05.1977 | 13.06.2022 மு.ப | 13.06.2022 மு.ப |
| 5. | 92 | வீ.ராஜேந்திரன், இளநிலை உதவியாளர் / பண்டகக் காப்பாளர் | 05.05.1970 | 13.06.2022 மு.ப | 13.06.2022 மு.ப |
| 6. | 93 | ந.குணசேகர், இளநிலை உதவியாளர் / பண்டகக் காப்பாளர் | 13.06.1979 | 13.06.2022 மு.ப | 13.06.2022 மு.ப |

மேற்குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர்கள் / பண்டகக் காப்பாளர்கள் தங்களது தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்குறிப்பிட்டுள்ள துறைத் தேர்வு மற்றும் அடிப்படை பயிற்சிகளை நிறைவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

1. தமிழ்நாடு மருத்துவக் குறியீடு (Tamil Nadu Medical Code Test)
2. தமிழ்நாடு அலுவலக நடைமுறை (Tamil Nadu Government Office Manual Test )
3. தமிழ்நாடு குடிமைப்பணிகள் பயிற்சி நிலையம், பவானிசாகரில் இளநிலை உதவியாளருக்கான இரண்டு மாத கால அடிப்படைப் பயிற்சி நிறைவு செய்ய வேண்டும்.

12/9/23

முதல்வர்
அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி
விழுப்புரம்

12.9.23

பெறுநர்

மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் /
பண்டகக் காப்பாளர்கள்,
அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி,
விழுப்புரம்.

படி:

1. நிருவாக அலுவலர் / இளநிலை நிர்வாக அலுவலர், அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி, விழுப்புரம்.
2. பட்டியல் பிரிவு, அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி, விழுப்புரம்.
3. பணிப்பதிவேடு (தொடர்புடைய பணியாளர்கள் அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி, விழுப்புரம்).
4. உபரி / கோப்பு.

படி பணிந்தனுப்பப்படுகிறது:

1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள், சென்னை-06.
2. இயக்குநர், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், கீழ்ப்பாக்கம், சென்னை-10.